සියලු ම හිමිකම් ඇවිරිණි / முழுப் பதிப்புரிமையுடையது / All Rights Reserved]

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (උසස් පෙළ) විභාගය, 2021 (2022)
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தர)ப் பரீட்சை, 2021 (2022)
General Certificate of Education (Adv. Level) Examination, 2021 (2022)

බුද්ධ ධර්මය I
பௌத்த சமயம் I
Buddhism I

41 T I

පැය දෙකයි
இரண்டு மணித்தியாலம்
*Two hours*

**அறிவுறுத்தல்கள்:**
- ※ **எல்லா** வினாக்களுக்கும் விடை எழுதுக.
- ※ விடைத்தாளில் தரப்பட்டுள்ள இடத்தில் உமது **சுட்டெண்ணை** எழுதுக.
- ※ விடைத்தாளின் மறுபக்கத்தில் தரப்பட்டுள்ள அறிவுறுத்தல்களைக் கவனமாக வாசித்துப் பின்பற்றுக.
- ※ **1** தொடக்கம் **50** வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றுக்கும் (1), (2), (3), (4), (5) என இலக்கமிடப்பட்ட விடைகளில் **சரியான** அல்லது **மிகப் பொருத்தமான** விடையைத் தெரிந்தெடுத்து **அதனைக் குறித்து நிற்கும் இலக்கத்தைத் தரப்பட்டுள்ள அறிவுறுத்தல்களுக்கு அமைய விடைத்தாளில் புள்ளடி** (X) இடுவதன் மூலம் காட்டுக.

**1.** புத்த பெருமானின் காலத்திலிருந்த துறவிகள், பிராமணர்கள் எவருக்கும் இல்லாததும், புத்தரிடம் மட்டும் சிறப்பாக காணப்பட்டதுமான அசாதாரண ஞானம்
(1) சேதோபரிய ஞானம் (2) சுத்தமய ஞானம்
(3) ஆசவக்கய ஞானம் (4) நேவசஞ்ஞாநாசஞ்ஞாயதனம்
(5) திப்ப சக்கு ஞானம்

**2.** 'பௌத்தர்களாக நமக்குள்ள மிகப்பெரிய பெருமை, புத்தர் வரலாறு இல்லாத கடவுளாக அல்லாது வரலாற்றைக் கொண்ட மனிதராக இருந்தமையாகும்.' இதற்கேற்ப புத்தரின் வரலாறு பற்றிய தகவல்களை வழங்கும் மூலாதாரம்
(1) சமந்தபாஸாதிகா (2) பாராஜிகபாலி (3) புத்தவம்சம்
(4) சுள்ளவக்கபாலி (5) புக்கலபஞ்ஞுதிப்பகரண

**3.** மஹா சிஹநாத சூத்திரத்தில் குறிப்பிட்டவாறு புத்த பெருமானின் பத்து அசாதாரண ஞானங்களில் ஒன்று
(1) அனாவரண ஞானம் (2) இத்திவித ஞானம்
(3) சப்பஞ்ஞுத ஞானம் (4) யமகபாதிஹாரிய ஞானம்
(5) நானாதிமுத்திக்கா ஞானம்

**4.** சூத்திரங்களில் இடம்பெற்றுள்ள தகவல்களுக்கு அமைய புத்த பெருமான் வேற்றுமத ஆச்சிரமத்திற்குச் சென்று தர்ம கலந்துரையாடல் நிகழ்த்திய சந்தர்ப்பம்
(1) மகாவீர நிகண்ட நாத புத்தருடனான சந்திப்பின்போது
(2) உருவெல் காசியப்பரின் மடாலயத்திற்கு வந்தபோது
(3) சஞ்சய பெல்லத்திபுத்தரைச் சந்திக்க வந்தபோது
(4) சகுலுதாயி நாடோடியைச் சந்தித்தபோது
(5) உபகஆஜீவகனைச் சந்தித்தபோது

**5.** வாழ்க்கையில் ஏற்படும் சுகதுக்கங்களின்போது (அட்டலோக தம்ம) நிலைகுலையாது அவற்றை எதிர்நோக்குவதைப் பிரதிபலிக்கும் புத்தரின் உயர் குணம்
(1) புரிசதம்மசாரதி குணம் (2) தாதி குணம்
(3) பத்மாகார வாழ்க்கை (4) சமானாத்மதா குணம்
(5) யதாவதி தத்தாகாரி குணம்

**6.** பின்வரும் நூல்களில் அபிதர்ம பிடகவுக்கு உரியது **அல்லாதது**
(1) விபங்கப்பக்கரணம் (2) புக்கலபக்ஞுத்திப்பகரணம் (3) பத்தானப்பக்கரணம்
(4) நெத்திப்பக்கரணம் (5) தம்மசங்கணீப்பக்கரணம்

7. தர்ம ரத்னத்தின் ஆறு பண்புகளைக் கொண்ட வாக்கியத்தில் 'அகாலிக' என்ற பதத்தினால் கருதப்படுவது,
(1) உபமானுசாரியினால் தர்மத்தை விளங்கப்படுத்த முடியும்.
(2) பௌத்தம் வெறுமனே கோட்பாடுகளில் மட்டும் தங்கியிருப்பது அல்ல.
(3) விளைவுகளை உடனடியாகவே பெறக்கூடியதாயிருத்தலாகும்.
(4) இந்த வாழ்க்கையிலேயே விளைவுகள் தோன்றுவதாக இருத்தலாகும்.
(5) ஒருவரின் மதிநுட்பத்துக்கு ஏற்ப அது உணரப்படும்.

8. 'பௌத்தம், நித்திய அல்லது தற்காலிக ஆத்மா இருக்கும்' என்பதனை நிராகரிக்கும் கோட்பாடு ஆகும். இதற்கேற்ப புத்தர் அவரின் சமகால ஆத்மா பற்றிய கோட்பாட்டை விமர்சித்துப் போதித்தது,
(1) ஆத்மா இருந்தால் அது நமக்குக் கீழ்ப்படிதல் வேண்டும் என்றாகும்.
(2) ஆத்மா நிர்வாண நிலை அடையும் வரை மட்டுமே நிலைத்திருக்கும் என்றாகும்.
(3) ரூப, வேதனா போன்ற ஸ்கந்த தர்மங்களுக்கு வெளியேயான ஆத்மா வாழ்கின்றது என்றாகும்.
(4) குசல அகுல கர்மங்களைச் செய்யும், அதன் விளைவுகளை அனுபவிக்கும் ஆத்மா மட்டுமே நிலைத்திருக்கும் என்றாகும்.
(5) அனைத்தும் மரணத்தில் முடிவடைவதால் நித்தியமான ஆத்மா என்பது இல்லை என்றாகும்.

9. விசாரணை செய்யும் பிக்கு 'ததாகத்' பற்றிய இரண்டு விடயங்களை பரிசீலிக்க வேண்டுமென விமங்சக சூத்திரம் கற்பிக்கின்றது. அந்த இரண்டு விடயங்களும்
(1) கருணையும் ஞானமும்
(2) சரீரத்தை அடக்குதலும் வாய்மொழியை அடக்குதலும்
(3) கடந்தகால வாழ்க்கையும் எதிர்கால வாழ்க்கையும்
(4) செய்யப்பட்ட நல்வினையும் தீவினையும்
(5) போதிக்கப்பட்ட தர்மமும் போதிக்கப்படாத தர்மும்

10. ஜாதி, ஜரா, வியாதி, மரணம் ஆகிய துன்பங்களிலிருந்து விடுபட்டு விடுதலை அடைவதற்கு புத்த பெருமான் கற்பித்த தனித்துவமான வழியின் விசேட பண்பு
(1) எப்போதும் புண்ணியச் செயல்களைச் செய்வதற்குக் கற்பித்தமை
(2) எல்லா கடவுள் நம்பிக்கைளையும் நிராகரித்தமை
(3) படிப்படியான பயிற்சிக்காக வழிகாட்டியமை
(4) பௌத்தமல்லாத விடுதலை மார்க்கங்களுக்கு எதிராக இருந்தமை
(5) புனித யாத்திரை வழிபாடுகளை நிராகரித்தமை

11. புத்தரின் காலத்தில் பௌத்தர் அல்லாத சிரமணப் பிரிவினரைப் போலவே, பௌத்த பிக்குமார் சமூகத்துக்கும் பொதுவானதாகக் காணப்பட்ட பண்பு
(1) ஆத்மவாதக் கோட்பாடுகளிலிருந்து விலகி இருத்தல்
(2) அத்தகிலாமதானு யோகத்தைத் தவிர்த்தல்
(3) வர்ணாச்சிரம தர்மத்தை ஏற்றுக்கொள்ளுதல்
(4) பிரம்மச்சாரி வாழ்க்கையை நடத்துதல்
(5) கர்ம விளைவுகளை ஏற்றுக்கொள்ளுதல்

12. சரீரப் பாதுகாப்புக்குத் தேவையான காவி ஆடை, சரீர சக்திக்கான தானம் ஆகியவற்றினால் திருப்திப்படல், காவியுடையுடன் மட்டும் நடமாடி சிறகுகளின் நிறை மட்டும் கொண்ட பறவைப் போலச் செயற்படுதல். மேலே குறிப்பிடப்பட்ட பகுதியில் பிரதிபலிக்கும் பௌத்த துறவு வாழ்க்கையின் குறிப்பிடத்தக்க விசேட இயல்பு
(1) தூய பிரம்மச்சரியம்
(2) பரார்த்த சேவையில் அர்ப்பணிப்பு
(3) குறைந்த ஆசைகள் கொண்ட (அல்பேச்ச) வாழ்க்கை
(4) பிராதிமோக்ஷத்தைப் பாதுகாத்தல்
(5) குருவைப் பின்பற்றுதல்

13. பிக்குகளின் ஒழுக்கத்துக்கு (வினய) அமைய நான்கு பாராஜிகாவில் **உள்ளடக்கப்படாத** குற்றம்
(1) மனிதக் கொலை
(2) பாலியல் நடத்தை
(3) களவெடுத்தல்
(4) போதை தரும் பானங்களை அருந்துதல்
(5) தம்மிடம் இல்லாத மேலான மனிதப் பண்புகள் உள்ளது எனப் பிரகடனப்படுத்துதல்

[பக். 3 ஐப் பார்க்க

0138

**14.** மகா சங்கத்தின் ஒன்பது பண்புகளில் 'ஆஹுனெய்ய' என்பதால் கருதப்படுவது
(1) இல்லறத்தில் உள்ள மக்களிடம் கருணையுடன் நடந்து கொள்ளுதல்
(2) தொலைவிலிருந்து கொண்டுவரப்பட்ட நான்கு தேவைப்பொருட்களை பெற்றுக்கொள்ள தகுதியானவராக இருத்தல்
(3) உறவினர்களுக்காகத் தயாரிக்கப்பட்ட தானங்களை வழங்குவதற்குப் பொருத்தமாயிருத்தல்
(4) துறவு வாழ்க்கை முறையாகச் செல்லக்கூடியதாயிருத்தல்
(5) தானங்களைப் பெறுவதற்குப் பொருத்தமாக இருத்தல்

**15.** பௌத்த பிக்கு ஒருவரின் பிரமச்சரிய வாழ்க்கையின் விசேட பண்பாகக் குறிப்பிடக்கூடியது
(1) இல்லற சமூகத்திலிருந்து முழுமையாக ஒதுங்குதல்
(2) வாழ்க்கை முழுவதும் பாலுறவு நடத்தையிலிருந்து விலகியிருத்தல்
(3) பிரம்ம உலகத்தில் பிறப்பு கிடைப்பதற்கு உதவும் பயிற்சிகளில் ஈடுபடுதல்
(4) தலைமயிரை மழித்து விடுதல்
(5) தானங்களில் (பிண்ட பாத) வாழுதல்

**16.** பிராமணீய போதனைகளின்படி சிலவேளைகளில் சுவதர்ம சட்டம் மாறுவதுடன் அங்கு சஷத்திரியர்களுக்கு உரிய கடமைகள் பிராமணர்களிடமும் ஒப்படைக்கப்படும். இது இடம்பெற்றது
(1) சஷத்திரியர்கள் தமது பணிகளை உரிய முறையில் செய்யாது விட்டபோது
(2) பிராமணர்களின் உரிமைகளை ஆட்சியாளர்கள் வழங்காதபோது
(3) அனர்த்தங்கள் நிகழும் சந்தர்ப்பத்தில்
(4) சஷத்திரியர்கள் பிராமணர்களின் அறிவுரைகளை ஏற்றுக்கொள்ளாதபோது
(5) பிராமணர்கள் ஆட்சி அதிகாரத்தைக் கோரி நிற்கும் சந்தர்ப்பங்களில்

**17.** புத்தர் காலத்தில் வாழ்ந்த சிந்தனையாளர்களிடையே அமராவிக்ஷேப வாதம் கற்பிக்கப்பட்டது
(1) சஞ்சக பெல்லத்திபுத்தவினால் (2) சஞ்சக பண்டிதரினால்
(3) ஜம்புக அஜீவகவினால் (4) பூர்ண கஸ்ஸப்பவினால்
(5) தேவிஜ்ஜ பிராமணரால்

**18.** புத்தரின் காலத்தில் காணப்பட்ட சமயக் கருத்துக்களிடையே அதிச்சசமுப்பன்ன வாதம் மூலம் வெளிப்படுத்தப்படுவது
(1) அதிபௌதிக சக்தியே அனைத்தும் இடம்பெறக் காரணமாகின்றது என்பது
(2) எல்லையற்ற விருப்பங்களை நிறைவேற்றக்கூடிய போதனை என்பது
(3) உயர்ந்த விருப்புக்கள் அல்லது எதிர்பார்ப்புக்கள் நோக்கிப் பயணிக்க வேண்டும் என்பது
(4) அதிமானசிக சக்தி எதிர்பார்ப்புக்கள் அனைத்தையும் நிறைவேற்றும் என்பது
(5) அனைத்தும் கட்டுப்பாடுகள் (ஹேதுபிரத்தியா) இல்லாது இடம்பெறும் என்பது

**19.** எவரேனும் ஒருவர் சந்தோஷம் அல்லது துக்கம் அல்லது சந்தோஷம் துக்கம் ஆகிய இரண்டும் இல்லாத ஏதேனுமொன்றை அனுபவிப்பாராயின் அது முன்பு செய்யப்பட்ட கர்மங்களுக்கு ஏற்பவே என ஏற்றுக்கொள்வோர்
(1) அகிரியவாதிகள் (2) நியாயவாதிகள்
(3) புப்பேகதஹேதுவாதிகள் (4) உலோகாயுதவாதிகள்
(5) சப்தபதார்த்தவாதிகள்

**20.** சமூகப் பரிணாமவாதம் பற்றிய பௌத்த போதனைகளுக்கேற்ப ஆதிகாலத்தில் நிலவிய சாதாரண நுகர்வு, சிக்கலான நிலைமைக்கு உள்ளாகத் தொடங்கியது
(1) சுவையான பூமி மறைந்து உலகத்து காளான்களை உண்ண ஆரம்பித்தபோது
(2) பூமிக் காளான்கள் மறைந்து திரட்டிய அரிசியை உண்ண ஆரம்பித்தபோது
(3) சுவையான பூமியை ஆவலுடன் உண்ண ஆரம்பித்தபோது
(4) சமூகத்தில் குடும்ப கட்டமைப்பு தோன்றியபோது
(5) அரச பதவியும் ஆட்சியும் ஆரம்பித்தபோது

**21.** புத்த பெருமானால் பாமொக் பொருட்டு ஒழுக்க விதிகள் விதிக்கப்பட்டதன் அடிப்படைக் காரணங்கள் பத்து என்று பாராஜிகபாலி குறிப்பிடுவதுடன் அதில் ஒன்று
(1) பிக்குமார் சமூகம் ஆரம்பமாகி நீண்ட காலம் கடந்தமை
(2) முந்தைய புத்தர்களால் வினய விதிகள் விதிக்கப்பட்டிருந்தமை
(3) பிக்குமாரை நிர்வகிப்பது இலகுவாயிருந்தமை
(4) அடக்கமில்லாதவர்களை அடக்குதல்
(5) பிக்குமார்களிடையே அறிஞர்கள் அதிகரித்தல்

[பக். 4 ஐப் பார்க்க

**22.** நிபுணத்துவமும் பல்வேறு திறன்களும் கொண்ட சீடர்கள் புத்த பெருமானால் பிரதம சீடர்களாக நியமிக்கப்பட்டதுடன், அனுருத்த தேரர் நியமிக்கப்பட்டது
(1) தெய்வீக சக்தி கொண்டவர்களிடையே தலைமைப் பதவிக்காகும்.
(2) தூதாங்கதாரிகளிடையே தலைமைப் பதவிக்காகும்.
(3) சத்தாவுடன் துறவிகளாகியோரிடையே தலைமைப் பதவிக்காகும்.
(4) விடாமுயற்சி உள்ளவர்களிடையே தலைமைப் பதவிக்காகும்.
(5) தர்ம போதனையாளர்களான பிக்குமாரிடையே தலைமைப் பதவிக்காகும்.

**23.** புத்த பெருமானால், தர்ம போதனையில் திறமையுள்ள பிக்குணிமார்களிடையே தலைவராக நியமிக்கப்பட்ட பிக்குணி
(1) மகாபிரஜாபதி பிக்குணி
(2) கேமா பிக்குணி
(3) பத்தகச்சானா பிக்குணி
(4) தம்மதின்னா பிக்குணி
(5) நந்தா பிக்குணி

**24.** இரண்டாவது பௌத்த பேரவைக்குக் காரணமான சாசனப் பின்னணியைக் குறிப்பிடும்போது சில பௌத்த மூலாதாரங்கள் குறிப்பிடும் மகாதேவ என்ற பிக்கு முன்வைத்த பஞ்ச வஸ்துவில் ஒன்று
(1) தங்கம், வெள்ளி ஆகியவற்றை ஏற்றுக்கொள்ளுதல் அனுமதிக்கப்பட்டது.
(2) அருகதர்களிடையே சந்தேகங்கள் இருக்கலாம்.
(3) தர்மஞானம் இல்லாவிட்டாலும் அருகதர் நிலையைப் பெற்றுவிட முடியும்.
(4) அருகதர்களும் புண்ணியச் செயல்களைச் செய்ய வேண்டும்.
(5) புத்தர்கள் தவத்திசாவில் வாழ்கின்றனர்.

**25.** மூன்றாவது பௌத்த பேரவையின் விளைவாகக் குறிப்பிடத்தக்கது
(1) வாய்வழி (பாணக) மரபு தாபிக்கப்பட்டமை
(2) நிகாய பிரிவுகளுக்கு அத்திவாரம் இடப்பட்டமை
(3) கதாவத்துப்பகரணய தொகுக்கப்பட்டமை
(4) சிறிய, மிகச்சிறிய சிக்ஷாபத பிரச்சினைகள் அடக்கப்பட்டமை
(5) மகாயான பௌத்தம் உதயமாகியமை

**26.** பௌத்தத்தில் போதிக்கப்படும் பஞ்சஸ்கந்தவில் விக்ஞாணஸ்கந்தய என்பதால் குறிப்பிடப்படுவது
(1) சரியான அறிவு
(2) சுக துக்கம் ஆகிய உணர்வுகள்
(3) இந்திரியங்கள், நோக்கங்கள் பற்றிய அறுவகை ஞானம்
(4) வெளிப்புற உலகம் பற்றிய ஞாபக சக்தி
(5) உருவம், சத்தம் என்பவை மீதெழும் உணர்வுகள்

**27.** துக்கம் பற்றிய மூவகை பேதங்களில் அடங்கும் விபரிணாம துக்கம் என்பது
(1) சம்ஸ்சார தர்ம பற்றிய துக்கம்
(2) விரும்பியவை கிடைக்காததினால் ஏற்படும் துக்கம்
(3) மனதில் எழுகின்ற சந்தோஷமின்மை
(4) மாற்றமடைதல் பற்றிய துக்கம்
(5) உருவம் போன்ற நோக்கங்களுடன் தொடர்பான அமைதியின்மை

**28.** சுத்ராந்த தர்மங்களுக்கு இடையே திரிலக்ஷன பற்றி விரிவாக விளக்குகின்ற போதனை
(1) தம்மிக்க சூத்திரம்
(2) மெத்தானிசங்ச சூத்திரம்
(3) பராபவ சூத்திரம்
(4) பத்தகம்ம சூத்திரம்
(5) சூளசச்சக சூத்திரம்

**29.** பௌதிக சூழலை நன்கு பாதுகாப்பதற்கு பௌத்தர்களாகிய நாம் செய்ய வேண்டிய நற்பணியாகக் குறிப்பிடத்தக்கது
(1) விகாரைகள் தூபிகளைக் கட்டுவதற்கு நதிக்கரையோரங்களைப் பயன்படுத்துதல்
(2) எந்த ஒரு காரணத்துக்காகவும் மரத்தை வெட்டாதிருத்தல்
(3) செவிமடுப்பவரின் வசதிக்காகப் பெரிய குரலில் பேசுதல்
(4) வீணான குப்பைகள், மலம், சிறுநீர் என்பவற்றை புல்தரையில் வீசுவதைத் தவிர்த்தல்
(5) ஒருபோதும் பூமியை அழிக்காதிருத்தல்

[பக். 5 ஐப் பார்க்க

**30.** சிறந்த கணவன் மனைவிக்கு இடையில் நல்ல உறவைப் பேணுவதற்கு கணவனால் மனைவிக்குச் செய்யப்பட வேண்டிய கடமை
(1) மனைவியை மதித்தல்
(2) மனைவியின் உறவினர்களை உபசரித்தல்
(3) சமத்துவத்தைப் பேணுதல்
(4) பிள்ளைகளைப் பராமரிப்பதில் உதவி வழங்குதல்
(5) சமய நடவடிக்கைகளில் மனைவியை ஊக்கப்படுத்துதல்

**31.** சாரிபுத்த மகாதேரர் போதித்த சச்சவிபங்க சூத்திரத்தின்படி சம்மாசங்கப்ப என்பதன் கருத்து
(1) தான, சீல, பாவனா பற்றிய சிந்தனைகள்
(2) அலோப, அதோஸ, அமோக பற்றிய சிந்தனைகள்
(3) நெக்கம்ம அவ்யாபாத, அஹிம்சா பற்றிய சிந்தனைகள்
(4) சீல, சமாதி, பஞ்ஞா பற்றிய சிந்தனைகள்
(5) அணிச்ச, துக்க, அனத்தா பற்றிய சிந்தனைகள்

**32.** பின்வரும் கூற்றுகளில் நிப்பான என்பதனை அறிமுகப்படுத்த பயன்படுத்தக்கூடியது
(1) பேராசையை முழுமையாக ஒழித்தல்
(2) புண்ணியச் செயல்கள் செய்வதால் பெறும் உயர்ந்த பலன்
(3) சீலம், சமாதானம் என்பவற்றின் விளைவுகள்
(4) சம்பூரணம் அடைவதால் பெறக்கூடிய முக்தி
(5) மறு உலகில் அடையும் உயர்ந்த பேரானந்தம்

**33.** புத்தர் காலத்து சமய நடைமுறைகளில் சுயக் கட்டுப்பாட்டு (அத்தகிலமதானு) யோகம் பின்பற்றப்பட்டது
(1) வைதீகப் பிராமண சமூகத்தினால்
(2) சமண நிகண்டர்களினால்
(3) அமராவிக்கேப்பவாதிகளினால்
(4) சார்வாக சிந்தனையாளர்களினால்
(5) உச்சேதவாதிகளினால்

**34.** புத்தர் காலத்து பாரதத்தில் பிராமண துறவிகள் மத்தியில் நிலவிய சாஸ்வத திருஷ்டி பௌத்தத்தினால் தவிர்க்கப்பட்டமைக்குக் காரணம்
(1) அந்த திருஷ்டிவாதிகள் மறு உலகை ஏற்றுக்கொள்ளாமை
(2) அவர்கள் சுய ஈடுபாட்டினை (காமசுகல்விகானு யோக) விரும்பியமை
(3) திருஷ்டிவாதம் முழுமையாக ஆத்மா வாழ்வதை முழுமையாக நிராகரித்தமை
(4) அந்த திருஷ்டிவாதிகள் கர்மவிபாகவை நிராகரித்தமை
(5) அது துக்கத்திலிருந்து விடுதலை பெற உதவாமை

**35.** பௌத்தத்தின்படி அரசியல், பொருளாதாரம், ஒழுக்கம் ஆகிய பல்வேறு பிரச்சினைகள் அதிகரித்தலின் காரணமாக முழுமையான சமூக வேதனைகள் எழுகின்றன. சக்கவத்திசீஹநாத சூத்திரத்தில் இனங்காணப்படக்கூடிய அவ்வாறான பிரச்சினை
(1) கல்வியறிவின்மை (2) சனத்தொகை அதிகரிப்பு
(3) வினைத்திறனற்ற அரசாட்சி (4) நோய்கள் துன்பங்களின் பரவல்
(5) சாதிப்பிரிவினைகள்

**36.** நல்ல, கெட்ட தனியாள் நடத்தைகளைக் காட்டுவதற்கு பௌத்த போதனைகளில் பயன்படுத்தப்படும் பதம்
(1) லோக - லொக்குத்தர (2) சங்கத - அசங்கத (3) கால - அகால
(4) சாது - அசாது (5) சுகதி - துகதி

**37.** தனிநபரினால் மீண்டும் மீண்டும் செய்யப்பட வேண்டிய குசல கர்மா, புண்ணிய கிரியா என்பன பௌத்தத்தில் குறிப்பிடப்பட்டுள்ளன. இவற்றில் குசல கர்மாவாக அமைவது
(1) புண்ணியங்களின் மகிழ்ச்சியை அனுபவித்தல்
(2) சமய வழிபாடுகளில் ஈடுபடுதல்
(3) மூத்தோரைப் பராமரித்தல்
(4) தானம் வழங்குதல்
(5) பேராசையிலிருந்து விலகியிருத்தல்

More Past Papers at
tamilguru.lk

[பக். 6 ஐப் பார்க்க

**38.** இல்லற வாழ்க்கையில் ஈடுபடும் பௌத்தர்களுக்கு உரிய பன்சில்களை விட அட்டசில் உயர்வானது என்று கருதப்படுவதற்கான காரணம்
(1) உயிர்க்கொலைப் பாவத்திலிருந்து விலகியிருத்தல்
(2) சமூக நேயமுள்ள தனிநபர்கள் உருவாதல்
(3) சந்தேகமின்றி நிப்பனவை அணுகுவதற்கு முடியுமாய் இருத்தல்
(4) எளிமையான வாழ்க்கையை விருத்தி செய்தல்
(5) த்யான, அபிக்ஞா என்பவற்றைப் பெறக்கூடியதாயிருத்தல்

**39.** சத்தா தொடர்பான பல்வேறு பௌத்த போதனைகளில் ஒன்று
(1) சொர்க்கத்திற்கான ஏணி (வாயில் கதவு)
(2) பிரம்ம விஹரணய
(3) நாட்டப்பட வேண்டிய ஒரு விதை
(4) பௌத்தர் ஒருவருக்கான கலங்கரை விளக்கம்
(5) பின்கிரியாவதம்

**40.** புத்தர் காலத்தில் கர்மா பற்றி ஏற்றுக்கெள்ளப்பட்ட பல கருத்துக்களில் பௌத்தத்துடன் **பொருந்தாத** ஒரு கருத்து
(1) கர்மத்தைச் செய்கின்ற மற்றும் அனுபவிக்கின்ற தனிநபர் எவரும் இல்லை என்பது
(2) காய கர்மா, மனோ கர்மத்தைவிட மிகவும் சக்தி வாய்ந்தது என்பது
(3) அருகர் நிலை அடைந்ததும் முன்னைய கர்மா செல்லுபடியற்றதாகி விடும் என்பது
(4) கர்மாவை அழித்துவிடுவதினால் முத்தி அடைய முடியும் என்பது
(5) மிகச்சிறிய புண்ணிய கர்மாவினால் கூட அருகதர்களுக்கு எந்த நன்மையும் இல்லை என்பது

**41.** இல்லறத்தவர் ஒருவரால் சம்பாதிக்கப்பட்ட செல்வத்தை நுகர்வது தொடர்பாக பத்தகம்ம சூத்திரத்தில் குறிப்பிடப்படும் உபதேசம்
(1) பஞ்சபலி நிறைவேற்றுதல்
(2) உழைத்த செல்வத்தின் மீதான பேராசையிலிருந்து விடுபட்டிருத்தல்
(3) செல்வத்தை நான்கு பகுதிகளாகப் பிரித்து நுகருதல்
(4) அழிவிலிருந்து செல்வத்தைப் பாதுகாத்தல்
(5) அதிகளவு நுகர்விலிருந்து விலகியிருத்தல்

**42.** அரசாங்கம் அனுமதி வழங்காத கள்ளத் தராசினால் நிறுத்து வியாபாரம் செய்தல் ஒரு குற்றமாகும் என்று குறிப்பிடும் பௌத்த போதனை உள்ளடங்கியிருப்பது
(1) சிங்காலோவாத சூத்திரத்தில் (2) வியக்கபஜ்ஜ சூத்திரத்தில்
(3) தம்மிக்க சூத்திரத்தில் (4) ராசிய சூத்திரத்தில்
(5) பிரம்மஜால சூத்திரத்தில்

**43.** தசராஜ தர்மவில் தபஸ் என்பதன் கருத்து
(1) அரசன் முதுமையடையும் போது துறவியாக வேண்டும் என்பது
(2) அவனது இராச்சியத்தில் துறவிகளுக்கு ஆதரவு வழங்க வேண்டும் என்பது
(3) கொள்கைகளுக்கு மதிப்பளிக்க வேண்டும் என்பது
(4) இந்திரியங்களை அடக்குதல் வேண்டும் என்பது
(5) ஜன்தவினால் அநியாயத்துக்குச் செல்லக்கூடாது என்பது

**44.** சக்கானுவர்த்தன சூத்திரத்துக்கு ஏற்ப சக்விதி மன்னர் தனித்துவமான ஐந்து குணங்களைக் கொண்டிருக்க வேண்டும். அவற்றுள் ஒன்று
(1) நற்குணங்கள் நிறைந்தவராக இருத்தல்
(2) ஏழைகளுக்குச் சேவை வழங்குதல்
(3) துறவியான பிராமணர்களிடமிருந்து ஆலோசனை பெறுதல்
(4) விவசாயிகளுக்கு வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்தல்
(5) காலத்துக்கேற்ற விதத்தில் நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல்

[பக். 7 ஐப் பார்க்க

**45.** "தம்மென பரே ரஜ்ஜேதீதி கோ வாசெத்தா, ராஜா" என்று அக்கஞ்ஞ சூத்திரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள கூற்றின் கருத்து

(1) அரசன் நேர்மையாக ஆட்சி செய்ய வேண்டும்.
(2) அரசன் நற்குணங்களைக் கொண்டிருக்க வேண்டும்.
(3) பக்கச்சார்பு உடையவனாக இருக்கக்கூடாது.
(4) சமய வழிபாட்டு இடங்களுக்கு மரியாதை செலுத்த வேண்டும்.
(5) மக்களைத் தொந்தரவு செய்யக்கூடாது.

**46.** சமத, விபஸ்ஸனா என்ற இருவித பௌத்த தியானங்களில் விபஸ்ஸனா என்பது

(1) பஞ்சநீவரணவை அடக்குதல்
(2) லௌகிக அபிக்ஞா பெறக்கூடிய தியானங்கள்
(3) திரிலஷ்ணவை பின்பற்றுதல்
(4) புத்தர் காலத்தின் துறவி, பிராமணர்களின் தியானம்
(5) மனத்தை ஒருமுகப்படுதும் பேறு (சித்த ஏகாக்ரதாவய) அடைதல்

**47.** சதர சத்திபத்தான தர்மங்களில் சித்தானுபஸ்ஸனாவவில் அடங்கிய விடயம்

(1) பிறரின் மனதின் இயல்பு பற்றி அறிந்திருத்தல்
(2) பஞ்சநீவரணய தன்னுள்ளே உள்ளதா இல்லையா என்பதை அறிந்திருத்தல்
(3) அனைத்தும் சித்திநியமவுக்கு அடங்குகிறது என்பதைச் சிந்தித்தல்
(4) ராகவினைக் கொண்ட மனம் ராகவினைக் கொண்டுள்ளது என்பதை அறிதல்
(5) சுக, துக்க, வேதனா என்பவற்றை விளங்கிக் கொள்ளுதல்

**48.** சமத பாவனாவைப் பயிற்சி செய்யும் யோகிக்கு உரிய நாற்பது தியானப்பாடங்கள் (கர்மஸ்தான) விசுத்தி மார்க்கத்தில் குறிப்பிடப்பட்டுள்ளன. அவற்றுள் ஒன்று

(1) தேவதனுஸ்ஸதி
(2) தானானுஸ்ஸதி
(3) கம்மானுஸ்ஸதி
(4) சித்தானுஸ்ஸதி
(5) வேதனனுஸ்ஸதி

**49.** பாவனா செய்வதற்கு கமட்டஹன் வழங்கும் ஆசிரியர் கொண்டிருக்க வேண்டிய பண்பு

(1) மூத்தவராக இருத்தல்
(2) புத்தி மிக்கவராக இருத்தல்
(3) சத்தா கொண்ட மனிதராக இருத்தல்
(4) பரித்தியாக சிந்தனை உடையவராக இருத்தல்
(5) தவறான செயல்களுக்கு எதிராக புத்திமதி கூறுபவராக இருத்தல்

**50.** மைத்திரி பாவனாவைப் பயிற்சி செய்பவர் மறு உலகில் பெறுகின்ற பேறு (ஆனிசங்ச)

(1) நிச்சயமாக மரணமடைதல்
(2) மரணத்தின் பின்னர் பிரம்ம உலகில் பிறப்பு எடுத்தல்
(3) செல்வச் செழிப்பான வாழ்க்கையைப் பெறுதல்
(4) மேலான ஞானம் மிக்கவராகுதல்
(5) மகிழ்ச்சி தரும் சரீர அம்சங்களைக் கொண்டிருத்தல்

* * *

 0138

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව / முழுப் பதிப்புரிமையுடையது / All Rights Reserved]

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව இலங்கைப் பரீட்சைத் திணைக்களம் Department of Examinations, Sri Lanka

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (උසස් පෙළ) විභාගය, 2021 (2022)
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தர)ப் பரீட்சை, 2021 (2022)
General Certificate of Education (Adv. Level) Examination, 2021 (2022)

| | |
|---|---|
| බුද්ධ ධර්මය | II |
| பௌத்த சமயம் | II |
| Buddhism | II |

**41 T II**

පැය තුනයි
*மூன்று மணித்தியாலம்*
*Three hours*

| | | |
|---|---|---|
| අමතර කියවීම් කාලය | - | මිනිත්තු 10 යි |
| மேலதிக வாசிப்பு நேரம் | - | 10 நிமிடங்கள் |
| Additional Reading Time | - | 10 minutes |

**வினாப்பத்திரத்தை வாசித்து, வினாக்களைத் தெரிவுசெய்வதற்கும் விடை எழுதும்போது முன்னுரிமை வழங்கும் வினாக்களை ஒழுங்கமைத்துக் கொள்வதற்கும் மேலதிக வாசிப்பு நேரத்தைப் பயன்படுத்துக.**

**அறிவுறுத்தல்கள் :**

✳ **பகுதி I** இலிருந்து **இரண்டு** வினாக்களையும் **பகுதி II** இலிருந்து **மூன்று** வினாக்களையும் தெரிவுசெய்து, எல்லாமாக **ஐந்து** வினாக்களுக்கு விடை எழுதுக.

## பகுதி I

**1.** (i) 'விஜ்ஜாசரண சம்பன்ன' என்ற புத்தரின் குணப்பண்பின் கருத்தைத் தருக. (02 புள்ளிகள்)

(ii) 'மகா கருணா' என்பதனை வரைவிலக்கணப்படுத்துக. (04 புள்ளிகள்)

(iii) புத்தரின் தனித்துவமான தலைமைத்துவப் பண்புகளில் **இரண்டினை** விளக்குக. (06 புள்ளிகள்)

(iv) பொத்தபாத பரிப்பிராஜகன், புத்தர் பெருமானை மதிப்பிட்ட விதத்தை விமர்சிக்குக. (08 புள்ளிகள்)

**2.** (i) சுத்த, விபங்க, கண்டக, பரிவார என்று பிரிக்கப்பட்டுள்ள பிடகம் எது? (02 புள்ளிகள்)

(ii) 'எஹிபஸ்சிக' அறப் பண்பினை அறிமுகப்படுத்துக. (04 புள்ளிகள்)

(iii) 'பௌத்தம், நித்தியாத்ம எண்ணக்கருவை தவிர்க்கின்றது.' விளக்குக. (06 புள்ளிகள்)

(iv) நடைமுறை வாழ்க்கைக்கான தத்துவம் என்ற வகையில் பௌத்த சமயத்தை மதிப்பிடுக. (08 புள்ளிகள்)

**3.** (i) வைதீக பிராமணர்களின் சுவர்க்க பராயன மார்க்கத்தின் பெயரைத் தருக. (02 புள்ளிகள்)

(ii) 'நியதிவாத' என்பதை அறிமுகம் செய்க. (04 புள்ளிகள்)

(iii) 'அகிரியவாதம்' பற்றிய பௌத்த ஆராய்வை விளக்குக. (06 புள்ளிகள்)

(iv) அக்கஞ்ஞ சூத்திரத்திற்கு அமைய குடும்ப அமைப்பின் தோற்றம் பற்றிப் பரிசீலிக்குக. (08 புள்ளிகள்)

More Past Papers at
tamilguru.lk

[பக். 2 ஐப் பார்க்க

## பகுதி II

**4.** (i) புத்த பெருமான் தனது சீடர்களின் போதனை செய்யும் திறன்களுக்கு மதிப்பளித்த சந்தர்ப்பம் ஒன்றை எடுத்துக்காட்டுக. (08 புள்ளிகள்)

(ii) புத்தருடைய காலத்தில் இல்லறத்து சீடர்களான ஆணும் பெண்ணும் பௌத்த சமய தர்மம் தொடர்ந்து நிலவுவதற்கு வழங்கிய அனுசரணையை மதிப்பிடுக. (12 புள்ளிகள்)

**5.** (i) உயிரினங்கள், உலகம் (சத்தா - லோகா) பற்றி பௌத்த பகுப்பாய்வு முறைகளில் ஏதேனும் ஒன்றை விவரிக்குக. (08 புள்ளிகள்)

(ii) "பகுப்பாய்வு செய்யப்பட்ட தர்மங்கள் அனைத்தும் திரிலக்ஷண இயல்பைக் கொண்டவை." ஆராய்க. (12 புள்ளிகள்)

**6.** (i) 'சம்சார துக்க' பற்றிய இறையியல் விவரணத்தைத் தருக. (08 புள்ளிகள்)

(ii) பிரதிலோம பிரதீத்ய சமுத்பாதய இற்கமைய துக்க நிரோதய இனை விளக்குக. (12 புள்ளிகள்)

**7.** (i) 'ஸ்வச்சந்ததாவ' என்றால் என்ன என்பதை அறிமுகப்படுத்துக. (08 புள்ளிகள்)

(ii) பௌத்தர் ஒருவர் ஸ்வச்சந்தாவ இனை கொண்டிருக்கலாமா என்பதனை ஆராய்க. (12 புள்ளிகள்)

**8.** (i) அசுப பாவனா என்பதை அறிமுகப்படுத்துக. (08 புள்ளிகள்)

(ii) இந்த பாவனாவின் நோக்கங்களை விளக்குக. (12 புள்ளிகள்)

* * *